<u>வணிகவரித்துறை</u>

# மக்கள் சாசனம்

## நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்கள்

வணிகவரித் துறையின் கீழ்க்கண்ட நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்களை வெளிப்படுத்தும் நோக்கில் இந்த மக்கள் சாசனம் அமைகிறது.

- சட்டங்கள் விதிமுறைகள் மற்றும் அவை சார்ந்த வழிமுறைகளை செம்மையாகச் செயல்படுத்துதல்
- வரி வருவாய் வசூலை அதிகரிப்பதன் வாயிலாக பல்வேறு நலத்திட்டங்கள் மற்றும் வளர்ச்சிப் பணிகளை செயல்படுத்தும் அரசின் முயற்சிக்கு உறுதுணையாக விளங்குதல்.
- வணிகர்கள் மற்றும் வரிவிதிப்பிற்குள்ளோர் வணிகம் மற்றும் தொழில் முனைவோருக்கு தரமுள்ள சேவை வழங்குதல்.

## வழிவகைகள்

மேற்கண்ட நோக்கங்களை நிறைவேற்றும் பொருட்டு இத்துறை கீழ்க்கண்ட வழிவகைகளை மேற்கொள்ள முயற்சிக்கும்.

- வெளிப்படையான நிருவாகம்
- காலந்தவறாமை மற்றும் திறமையான வினையாக்கம்
- மரியாதை மற்றும் புரிதலுடன் கூடிய நல்லிணக்கம்
- நேர்மையுடன் நீதி வழுவாமை
- பொறுப்பும் மற்றும் நம்பகத்தன்மை

## எதிர்பார்ப்புகள்

துறையின் சிறப்பான பணி மற்றும் நிருவாகம் வணிகர்களின் ஒத்துழைப்பை சார்ந்துள்ளது. எனவே, கீழ்க்கண்டவற்றை வணிகர்களிடமிருந்து இத்துறை எதிர்பார்க்கின்றது:–

- வணிகங்களைப் பதிவு செய்தல் மற்றும் புதுப்பித்தலை உரிய காலத்தே செய்தல்



- கணக்குகளை முறையாகப் பேணுதல் மற்றும் சமர்ப்பித்தல்
- அரசு அளிக்கும் சலுகைகளை பயன்படுத்தி விற்பனை விவரப் படிவங்களைக் குறித்த நாளில் தாக்கல் செய்தல்
- வரிகளை குறித்த காலத்தில் செலுத்துதல்
- சட்டங்களை முழுமையாக கடைபிடித்தல்

## மேற்குறிப்பிட்டுள்ள வழிவகைகள் மற்றும் எதிர் பார்ப்புகளின் பெருமுயற்சியாக இத்துறை

- உறுதி மொழிகள், தெரிவிப்புகள், விண்ணப்பங்கள், வரி விதிப்பு விவர அறிக்கை மற்றும் அனைத்து கடித தொடர்புகளுக்கும், கிடைக்கப் பெற்றவுடன் அல்லது அதிகபட்சமாக 7 நாட்களுக்குள் ஒப்புகை அளிக்கும்.
- கடிதங்கள் கிடைக்கப் பெற்ற 30 வேலை நாட்களுக்குள் அவற்றின் மீது உரிய நடவடிக்கை எடுக்கும்

- தவிர்க்க முடியாத காரணங்களினால், முடிவு எடுப்பதில் தாமதமேற்படின், இடைக்கால பதில் அளிக்கப்படும்.
- திருப்பித் தர வேண்டிய தொகையை, ஏற்கத்தக்க கோரிக்கை கிடைக்கப்பெற்ற 90 நாட்களுக்குள் வழங்கும்
- நிறுத்தி வைக்கப்பட்ட சரக்குகளை, அதற்குரிய கோரிக்கைகள், சரியாக மற்றும் முழுமையாக கிடைக்கப்பெறின், அவைகளை உடனடியாக விடுவிக்கும்
- இறுதியான வரி விதிப்பிற்காக சமர்ப்பிக்கப்படும் கணக்குகளை, காலதாமதமின்றி சரிபார்க்கும்

**இத்துறை, மேலும், கீழ் கண்டவற்றை உறுதி செய்ய முயற்சிக்கும்**

- வணிகர்களுடன் தொடர்புடைய அனைத்து அலுவலர்களும் அடையாள அட்டை வைத்திருப்பார்கள்



- பெறப்படும் தனிப்பட்ட மற்றும் வணிகம் தொடர்பான தகவல்கள் ரகசியமாக பேணப்படும்
- சரக்குகள் நிறுத்தி வைக்க நேரிடின், அதற்குரிய காரணங்களை விளக்கிய பின்னரே, அந்நடவடிக்கை மேற் கொள்ளப்படும் (இறுதி ஆணை பிறப்பிக்கப்படும் முன்னர், முழுமையான வாய்ப்பு அளிக்கப்படும்)
- வியாபாரத் தலங்கள், அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலர்களின் அனுமதி பெற்ற பின்னரே பரிசோதிக்கப்படும்.
- மேல்முறையீடு பற்றிய வழிமுறைகள் மற்றும் மேல்முறையீட்டு அலுவலர் குறித்த முழுத்தகவல்கள் யாவும், அவற்றை கேட்போர்க்கு வழங்கப்படும்
- கொள்கை மற்றும் வழிமுறைகள் குறித்து ஆய்வு செய்யும்பொழுது, வணிக சங்கங்கள், தொழில் மற்றும் நுகர்வோர் ஆகியோருடன் கலந்து ஆலோசிக்கப்படும்.

- தேவையான தகவல்கள் மற்றும் வழிமுறை பற்றிய விவரங்களை சென்னை, சேப்பாக்கம், வணிகவரி ஆணையர் அலுவலகத்திலுள்ள இணை ஆணையர் (பொது மக்கள் தொடர்பு) அவர்களை அணுகினால் உடனடியாக வழங்குவார்.
- சட்டம் மற்றும் வழிமுறைகள் குறித்த அனைத்து மாற்றங்களும் அவ்வப்பொழுது விளம்பரப்படுத்தப்படும்.

## தரமான சேவை வழங்குவதை நோக்கி . . .

- வணிகர்கள் விண்ணப்பம் தாக்கல் செய்த 30 நாட்களுக்குள் பதிவுச் சான்றிதழ் பெற்றுக் கொள்ள உரிமையுண்டு.
- வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழ் அந்த நிதியாண்டிற்கு செல்லுபடியாகும். தகுதிக்கேற்ப, அச்சான்றிதழினை, ஆண்டுக்கு ஒரு முறையோ, ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறையோ, புதுப்பித்துக் கொள்ளலாம்.



- வணிகர் நல வாரியம், வாரிய உறுப்பினர்கள் மற்றும் அவர்கள் குடும்பத்தினருக்கு, மருத்துவ சிகிச்சை, படிப்பு வசதி போன்றவற்றிற்கு நிதி உதவி வழங்கும் நோக்கத்துடன் ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- வணிகவரித்துறை சார்ந்த பதிவு செய்தல், வரி செலுத்துதல் மற்றும் பொருட்கள் மீதான அமலிலுள்ள வரிவிகிதங்கள் ஆகியவை குறித்த பொது விவரங்கள் ***www.tnsalestax.com*** என்ற வலை தளத்தின் மூலமாக கிடைக்கும்.
- வரிவிகிதம் குறித்தான தெளிவுரைகள் கோரி விண்ணப்பித்தால் வணிகவரி ஆணையர், தமிழ்நாடு பொது விற்பனைவரிச் சட்டம், 1959 பிரிவு 28–அன்கீழ் கூடியவரை விரைவில் விளக்கமளிப்பார். தவிர்க்க முடியாத காரணங்களினால், தெளிவுரை வழங்குவதில் காலதாமதம் ஏற்படின்,

வணிகவரி ஆணையர் இடைக்கால பதில் ஒன்றை அனுப்புவார்.

- புகார்கள் மற்றும் குறைகள் குறித்து வணிகர்களும், பொதுமக்களும், சென்னை, சேப்பாக்கம், வணிகவரி ஆணையர் அலுவலகத்திலுள்ள இணை ஆணையர் (நிருவாகம்) அவர்களின் தலைமையில் இயங்கும் குறைதீர்க்கும் பிரிவிற்கு மனு செய்யலாம்.

**முடிவுரை**

இத்துறை, சட்டவிதிமுறைகளை ஏற்று செயல்படும் வணிகர்களை கண்டறிந்து அவர்களை ஊக்குவித்து, அவ்வாறு அல்லாதவர்களை நெறிப்படுத்த கடுமையான நடவடிக்கை எடுக்கும். இத்துறையும், வணிகர்களும் ஒருவருக்கொருவர் கூட்டாக இணைவதன் மூலம், மாநிலத்தின் வளர்ச்சியில் பங்கேற்க இயலும் என நம்பப்படுகின்றது.

**செ.ம.வேலுசாமி**
தொழில் மற்றும்
வணிகவரித்துறை அமைச்சர்